இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) மற்றும் 108(1) உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிரயம் ரூபா 189,170,790 ஆன பயன்படுத்தக்கூடிய நிலைமையில் காணப்படாத மருத்துவ பீடத்தின் கேட்போர்கூடம் 2020 ஆம் ஆண்டின் போது சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமையால் கட்டிட சொத்து மற்றும் நடைமுறை வேலை என்பன அப்பெறுமதியால் முறையே அதிகரித்தும் மற்றும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 மற்றும் 69 ஆம் பந்திகளின் பிரகாரம் சொத்தொன்றைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா	கேட்போர் கூட நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் சொத்தொன்றாகக் கணக்கீடு செய்து பெறுமானத் தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதுடன் ஆசனங்கள் பொருத்தும் பணிகள் கல்வி அமைச்சின் மூலம் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப மனித வள அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் தற்போது ஆசன பகுதி பொருத்தப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு பொருத்தமான நிலையில் கொண்டு வரும் வரை சொத்து ஒன்றாக இனங்காணாமல் நடைமுறை வேலையின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	38,622,370 அதிகரித்தும் திரண்ட நிதியம் ரூபா 29,163,830 மற்றும் மீளாய்வாண்டின் மிகை ரூபா 9,458,540 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் மாக்கந்துர வளாகத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு மின்சார வழங்கலை பெற்றுக்கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 4,436,225 கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் கட்டிடத்தின் பெறுமதி மற்றும் ஆண்டின் மிகை குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	இது மின்சார சபையினால் பொருத்தப்படுகின்ற டிராஸ்போமர் மற்றும் ஏனைய உபகரணங்களுக்காகவும் மற்றும் சேவைக் கட்டணங்களுக்காவும் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளாக இருந்தமையால் மற்றும் மின்சார டிராஸ்போமர் மின்சார சபையின் சொத்து ஒன்றாக இருந்தமையால் பல்கலைக்கழகத்தின் கணக்குகளில் மூலதனமாக்குவதற்கோ அல்லது அதற்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்வதற்கோ முடியாமல் இருந்தது.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க மூலதனமாக்கப்பட வேண்டிய சொத்துக்கள் சரியாக இனங்காணப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 மற்றும் 58 ஆம் பந்திகளின் பிரகாரம் தனியான சொத்து வகுப்பாக இனங்காண வேண்டிய கிரயம் ரூபா 36,671,442 ஆன வீதி முறைமை மற்றும் உள்ளக இணைப்பு சிறு கற்கள் பதிக்கப்பட்ட வீதி மற்றும் ரூபா 15,607,903 ஆன தொலைத்தொடர்பு வலையமைப்பு உபகரணங்களின் பெறுமதி என்பன மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் முறையே காணியின் கீழும், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 649 மற்றும் 09/2022 இன் பிரகாரம் சொத்து வகுப்பு வகைப்படுத்தப்பட்டு பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்படுகின்றமையும் வீதி முறைமைகள் முறையான திட்டத்தின் பிரகாரம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் கணக்குகளில் சரி செய்யப்படும்.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க சொத்துக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி மாற்றமடைகின்ற ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் அல்லது ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் முறையே 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 325,750,000 தொகைக்கும், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,784,300,000	APFA இன் செயலாளரால் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் கணக்காளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு முதல் கிரயம் முறைமையின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் கணக்கீடு செய்வதற்கும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொகைக்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் முறையே 11 வருடங்கள் மற்றும் 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வகுப்பில் deemed கிரயம் (deemed cost) அதன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுவதாகவும் இது 2024 இன் நிதிக்கூற்றுக்களில் கணக்குக் கொள்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமையால் காணி மற்றும் கட்டிடங்கள் மூலதனமாக்கப்படவில்லை.	
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 58 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட சொத்துக்களைக் கணக்கீடு செய்யும் போது தனித்தனியான சொத்து வகுப்பின் கீழ் இனங்காண வேண்டிய பெறுமதி ரூபா 379,700,492 ஆன தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், மின்சாரமும் பொருத்திகளும் மற்றும் நீர்க்குழாய், கழிவு நீர்க் குழாய், வடிகால் விடயங்கள் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு கட்டிடங்களுக்குரிய சதவீதத்தின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 9,210,753 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் மிகை மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் மீதி என்பன அப் பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடங்களில் நியாயமான பெறுமதி மற்றும் தளபாட பொருட்களின் பெறுமதி தொடர்பாக வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க சரியான வகைப்படுத்தலின் கீழ் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 சனவரி 29 ஆம் திகதிய இலக்கம் 01/2024 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிச் சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் பிணைமுறி உடன்படிக்கையை மீறிய நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகளுக்காக மீளாய்வாண்டிற்குரிய அறவிட	85 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் தற்போது அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் திட்டத்தின் பிரகாரம் செலுத்துபவர்களிடம் இருந்து வட்டி அறவிடாது	சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் சரியாக அறவிட வேண்டிய வட்டியைக் கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

	வேண்டிய 12,517,718 வட்டியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	கிரயம் ரூபா 948,000,017 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இருந்து பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 21,305,996 அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	நீண்ட காலம் முதல் இந்த முறையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் இது தொடர்பாக கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பயன்பாட்டு பொருத்தமான நிலைக்கு கொண்டு வரப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படல் வேண்டும்.
(இ)	காணி கைப்பற்றல் சட்டத்தின் 38(அ) உப ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழகத்தால் 2024 செப்டெம்பர் 26 ஆம் திகதி உரித்து கையேற்கப்பட்டிருந்த மாக்கந்துர வளாகத்தில் 214 பேர்ச் அளவான இரண்டு காணி கூறுகளை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய சட்டத்தின் பிரகாரம் உரித்து பெறப்பட்ட திகதியில் இருந்து 07 சதவீத வட்டிக்காக ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	காணி பகுதிகளுக்காக சட்டரீதியான கையளித்தல் பத்திரம் வழங்கப்படாது இருந்தமையால் அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க முடியாது இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் மூலம் இது தொடர்பான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 2,214,330 ஆன சுய நிதியீட்ட பாடநெறியாளர்களின் பல்கலைக்கழக பங்களிப்பு வருமானம், ஆண்டின் வருமானத்தில் கணக்கீடு செய்யப்பட்டமையாலும், மீளாய்வாண்டிற்குரிய பல்கலைக்கழக பங்களிப்பு வருமானம் ரூபா 1,605,757 ஆண்டின் வருமானத்திற்கு கணக்கீடு செய்யப்படாமையாலும் ஆண்டின் மிகை ரூபா 608,573 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கடந்த ஆண்டிற்குரிய பல்கலைக்கழக பங்களிப்பு வருமானம் ரூபா 558,910 இனங்காணப்படாமையின் காரணமாக திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டுக்குரிய வருமானம் இலாபத்தில் சீராக்கல் மற்றும் மீளாய்வாண்டுக்குரிய வருமானம் கணக்கீடு செய்யாமை சரி செய்யப்படுவதுடன் திரண்ட நிதியத்தில் குறைவொன்றும் ஏற்படவில்லை.	ஆண்டுக்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு	உரிய விடயப் பொறுப்பு அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக்கழகத்தால் மீளாய்வாண்டில் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 475,529,828 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	பல்கலைக்கழகத்தின் நிதிக் குழுவினதும், நிர்வாக சபையினதும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்புக்களுக்காக பல்கலைக்கழகத்தின் நிதிக் குழுவினதும், நிர்வாக சபையினதும் மற்றும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1992 இன் 62 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு (திருத்த) சட்டத்தின் 4(i) ஆம் உப பிரிவு	19 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை செலுத்துதல் தாமதமடைந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 1,942,355 மிகைக் கட்டணத்தை செலுத்துவதற்கு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	30 நாட்களுக்குள் பணிக்கொடை பணம் செலுத்துவதற்கு பிரயோக ரீதியில் முடியாதிருந்தமையால் பல்கலைக்கழக நிறுவனங்களின் பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் சேவையில் இருந்து கேட்டு விலகியமையால் நியமன அதிகாரியான நிர்வாக சபைத் தீர்மானத்திலும் மற்றும் 7.9 ஆம் பந்தியின் தீர்மானத்தின் பிரகாரமும் பதவி விலகியதை கையேற்கும் வரை சேவையில் முடிவடைவதால் உரித்தான எந்த ஒரு கொடுப்பனவும் அங்கீகரிக்க முடியாதிருந்தமையும் ஊழியர்களுக்கு ஒழுக்காற்று	பணிக்கொடை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை, பிணை முறி உடன்படிக்கையின் அடிப்படையில் கற்கை விடுமுறை பெற்று இருக்கின்றவர்கள் தாமாகக் கேட்டு விலகியமை தாமதத்திற்கு காரணமாக இருந்தது.	
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134	சுதந்திரத் தன்மைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகளிலிருந்து சுதந்திரமாகக் காணப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தப் பட்டியல்கள் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகளை செய்வதற்கு முன் ஒப்பந்தப் பட்டியலை பரீட்சித்து கொடுப்பனவுகளை பரிந்துரை செய்வதற்கும், பணிக்கொடை கணிப்பீடு செய்து கொடுப்பனவு சரியாக உள்ளது என உறுதிப்படுத்துவதற்கும் உள்ளகக் கணக்காய்வு தொடர்புபடுத்தப்படடிருந்தது.	2018 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சகல பட்டியல்களும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஒட்டுமொத்த அரச பல்கலைக்கழக முறைமையினாலும் பணிக்கொடை செலுத்துதல் முழுமையான கணக்காய்வின் பின்னர் செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக் கான திருத்தப்பட்ட தாபனவிதிக் கோவையின் 09 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி	பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்கை முறையான வகையில் உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,388,115,483 செலுத்தப்பட்டிருந்தது.	விரிவுரையாளர்களின் நாளாந்த கடமையின் பிரகாரம் விரிவுரைகளை நடாத்துதல், விரிவுரைகளுக்காக தயாரித்தலை உள்ளடக்கிய கல்விசார் நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக ரீதியிலான கடமைகளும் நிறைவேற்றப்படுவதுடன் இந்த கடமைகள் தொடர்ச்சியாக வருடம் முழுவதும் முழு நேரமும் மேற்கொள்ளப்படுவதுடன் அது 08 மணித்தியாலக் கடமை அல்லாமல் அவர்களுக்கு கையளிக்கப்படுகின்றமை யும் சாதாரண ஏற்றுக்கொள்ளலாக இலங்கைப் பல்கலைக்கழக	பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

முறைமையில் கல்விசார் பதவியணியினரின் கைவிரல் அடையாள இயந்திரம் ஊடாக கட்டுப்படுத்துவதற்கோ அல்லது ஏனைய முறையில் வருகைகளை அல்லது வெளிச்செல்கையினை குறிப்பிட முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,299,949,538 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 348,844,769 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 951,104,769 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மூலதன வடிவிலான மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைக்கின்ற வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழகம் 1999 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்கின்ற மதிப்பீட்டு பெறுமதி ரூபா 40,000,000 ஆன மாக்கந்துர வளாகத்தில் 22 ஏக்கர் காணியை சட்ட ரீதியாக பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மொத்த மதிப்பீடு 2025 மார்ச் 23 ஆந் திகதி பன்னல பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டதுடன் காணிக்கான சட்ட ரீதியான கையளித்தல் பத்திரம் வழங்கும் மிகுதி நடவடிக்கைகள் பண்ணல பிரதேச செயலாளரார் மேற்கொள்ளப்படுகின்றது.	விரைவாக கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மாக்கந்துர வளாகத்தில் 74 பேர்ச் அளவான 03 வயல் காணிக் கூறுகளைக் கையேற்பதற்காக ரூபா 1,013,750 முற்பணத் தொகை மற்றும் தெங்கு ஆராய்ச்சி சபைக்கு உரித்தான 05 ஏக்கர் காணியைக் கையேற்பதற்காக ரூபா 10 மில்லியன் தொகை என்பன 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே பன்னல பிரதேச செயலாளருக்கும், தெங்கு ஆராய்ச்சி சபைக்கும் செலுத்தப்பட்டு 11 வருடம் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் அந்தக் காணிகளை சட்ட ரீதியாக பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மொத்த மதிப்பீடு 2025 மார்ச் 23 ஆந் திகதி பன்னல பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டதுடன் காணிக்கான சட்ட ரீதியான கையளித்தல் பத்திரம் வழங்கும் மிகுதி நடவடிக்கைகள் பண்ணல பிரதேச செயலாளரார் மேற்கொள்ளப்படுகின்றது.	விரைவாக கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(இ)	பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய பிணை முறி பெறுமதி வழுக்களுடன் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 4,666,714 குறைத்து அறவிடப்பட்டிருந்ததுடன் அந்த நிலுவை பிணைமுறி தொகைகளை உரிய விரிவுரையாளர்களிடமிருந்தோ அல்லது அதற்குப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் களிடமிருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விரிவுரையாளர்களால் கற்கை விடுமுறை பெற்றுக் கொள்ளும் போது வழங்கப்பட்டிருந்த விடயங்களின் பிரகாரம் பிணைமுறிகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டுள்ளமையும் பிணை முறி கையொப்பமிட்ட பின்னர் அவரால் சமரப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களின் அடிப்படையில் பெறுமதி மீண்டும் கணிப்பிடப்பட்ட போதும் அது தொடர்பான உறுதிப்படுத்தல் ஒன்று உரிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தின் மூலம் இது வரை வழங்கப்படாது இருந்ததுடன் எவ்வாறாயினும் அரசாங்கத்தின் கணக்காய்வு விடயங்களில் காண்பிக்கப்பட்டதன் அடிப்படையில் உரிய மீள் கணிப்பீடுகள் மேற்கொண்டு அவரிடம் இருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அறவிட வேண்டிய சரியான பிணைமுறி பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	குளியாப்பிட்டி பராமரிப்புக் களஞ்சியத்தின் 2024 திசெம்பர் 20 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது இருப்புப் புத்தகம் நாளாந்தம் நாளதுவரையாக் கப்படாதிருந்ததுடன் இருப்பு முகாமைத்துவத்திற்காக சகல செயற்பாடுகளையும் மேவுகை செய்கின்ற கணனி மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.	பராமரிப்பு களஞ்சியத்தின் இருப்பு முகாமைத்துவத்திற்காக கணனி தொகுதி ஒன்றைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பு பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கும் இருப்பு முகாமைத்துவத்திற் காக சகல நடவடிக்கைகளை யும் மேவுகை செய்கின்ற கணனி பொதி ஒன்றை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்கலைக்கழகத்தில் 11 செயற்திட்டங்களுக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 46,364,339 ஆன	ரூபா 533,393 தொகை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 1,023,823	உத்தரவாதக் காலம் கடந்த நிறுத்தி வைத்தல்

நிறுத்திவைத்தல் பணத்திற்குரிய உத்தரவாத காலம் முடிவடைந்து 11 வருடங்களும் 05 மாதங்களும் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் உரிய பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மிகுதிப் பணம் தொடர்பாக விடுவிப்பதற்கும் மற்றும் பொருத்தமான பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	பணம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	உயர் கல்வியை விரிவுபடுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தலை துரிப்படுத்தும் (AHEAD) செயற்திட்டத்தின் மூலம் வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், தொழில்நுட்ப பீடம் மற்றும் கால்நடை வள, மீன்பிடி மற்றும் போஷணை பீடம் என்பவற்றுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 8,013,485 ஆய்வுகூட உபகரணங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 6,168,402 பெறுமதியான ஆய்வுகூட உபரகணங்களின் உத்தரவாத காலம் 2024 யூன் வரையில் முடிவடைந்திருந்தது.	RT - PCR இயந்திரம் மற்றும் பீட கட்டிடங்களின் நிர்மாணங்கள் முறையே ஆய்வு கூடத்தினதும், Fume Hood with Centrifugal Fan பூர்த்தி செய்யப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது. Biosafety Cabinet உபகரணம் பட்டம் மற்றும் பட்டப்பின் பாடநெறிகளுக்கு உரியாதாக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை நடவடிக்கைகளில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகின்றது.	வளங்களை செயற்திறனாகவும், ஆகக் கூடிய வினைத்திறனுடனும் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	2020 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு மருத்துவ பீடத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 23,159,226 பெறுமதியுடைய சமூக நிலையம் 05 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் இருந்து குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	2019 ஆம் ஆண்டில் மருத்துவ பீடம் நிர்மாணிக்கப்படுகின்ற போது எதிர்கால நிகழ்ச்சித் திட்டமாக நிர்மாணிக்கப்பட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிரந்தர திட்டத்தில் சமூக மருத்துவ நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தற்போது தவறியிருந்ததுடன் பொருளாதார கஸ்டங்களினால் பெற்ற உதவியினைச் சேகரிப்பதற்கும் மருத்துவ பீடத்தின் வாட்டுகளுக்காக கிடைக்கப் பெற்ற உயர்தரத்திலான கட்டில்களை களஞ்சியப்படுத்தி பாதுகாப்பாக வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய கட்டிடம் எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.